1977 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தனியார் பஸ்கள் ஏதும் நீள வண்டி ஊட்டி வரை இப்போது செல்லவில்லை. தனியார் வண்டி ஒன்றுதான் இப்போது செல்லுகிறது. அந்த வண்டி குறைந்த நீள வண்டிதான். அதுவும் கோவையிலிருந்து ஊட்டி வரைதான் செல்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: மலைப்பாங்கான சாலையாக இருப்பதால் பெரிய பஸ் விடுவது சங்கடம் என்று சொன்னார்கள். ஆனால் ஏற்கனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை சீசன் காலத்தில் சென்னையிலிருந்து ஊட்டிக்கு பஸ் போய்க் கொண்டிருந்தது. அந்த மாதிரி ஏற்பாடு ஏன் நிறுத்தப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: 1975ஆம் ஆண்டு வரை பல்லவன் போக்குவரத்து விரைவுப் பேருந்துகள் சென்னையிலிருந்து ஊட்டி வரை சென்று கொண்டிருந்தன. மலைப் பகுதியில் நீள சேசிஸ் வண்டிகளை விடுவதால் விபத்துக்கள் உண்டான காரணத்தால் தனிக் கமிட்டி போட்டு கமிட்டியின் சிபாரிசின்படி இந்த முறை நிறுத்தப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்பு தீர்மானங்கள்

(அ) பாளையங்கோட்டை சதகதுல்லா அப்பா கல்லூரி மாணவர்கள் மீது காவல் துறையினர் தடியடிப் பிரயோகம் செய்ததும், அதையொட்டி அங்கு ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையிலுள்ள, சதகதுல்லா அப்பா கல்லூரி மாணவர்கள் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததும், அதையொட்டி அங்கு ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும் விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று திருவாளர்கள் துரைமுருகன், சோ. அழகர்சாமி, மு. அம்பிகாபதி, ச. சண்முகம், எம். ஏ. லத்தீப், ஏ. ஆர். மாரி

முத்து, ஜே. ஜேம்ஸ், எஸ். ஜே. சாதிக்பாட்சா, சி. கோவிந்த ராஜன் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசர முக்கியமானது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-20)

* திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டையிலே இருக்கின்ற மைனாரிட்டி சமுதாயத்தினால் நடத்தப்படுகின்ற சதகத்துல்லா அப்பா கல்லூரியிலே நடைபெற்ற சம்பவம் பற்றி விவாதிப்பதற்காக இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டுமென்று நான் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில் மாணவர்களுடைய கோரிக்கை என்னவென்றால், கல்லூரி மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெறவேண்டுமென்றும், நியமன முறை கூடாது என்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாணவர்கள் அவர்களுடைய கோரிக்கையை வற்புறுத்தியபொழுது கல்லூரி முதல்வர் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதைத் தொடர்ந்து அவர்கள் அமைதியான முறையிலே கல்லூரியிலிருந்து வெளியேறியபோது இந்தச் சம்பவம் நடைபெற்று, போலீஸார் தலையிட்டு தடியடி, கண்ணீர்ப் புகை போன்ற சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்தக் கல்லூரியின் மாணவர்கள் மட்டுமல்ல, அங்கே இருக்கின்ற மற்றக் கல்லூரிகளின் மாணவர்கள் மீதும் தாக்குதல் நடைபெற்றிருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன, இதுபோன்ற சம்பவங்கள் நாட்டிலே பரவலாக நடைபெறுகின்றன.

இதிலே அரசாங்கத்தின் கொள்கையைத் தெரிந்து கொள்ளவும், மாணவர்களின் கோரிக்கைகளைப்பற்றி இந்த மன்றத்திலே விவாதிக்கவும், இந்த அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், எப்படி சென்னையிலே உள்ள கல்லூரி மாணவர்களை அழைத்துப் பேசினார்களோ, அதைப்போன்று பாளையங்கோட்டை கல்லூரி மாணவர்களையும்

அழைத்துப் பேசி அவர்களுடைய பிரச்னைகளுக்குத் தீர்வுகாண வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க அனுமதிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. மு. அம்பிகாபதி :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாளையங்கோட்டை சதகத்துல்லா அப்பா கல்லூரி மாணவர்கள் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி ஊர்வலம் நடத்தினார்கள். அப்படி ஊர்வலம் சென்ற மாணவர்களைப் போலீசார் கடுமையாகத் தாக்கி யிருக்கிறார்கள். அங்கே மாணவர்கள் தேர்தல் நடத்த வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை வலியுறுத்தச் சென்ற மாணவர்கள் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, நெல்லை மாவட்டத்திலுள்ள அனைத்துக் கல்லூரிகளும் மூடப்படவேண்டு மென்று கலெக்டர் அவர்கள் அறிவித்திருப்பதாக நேற்று இரவு ரேடியோவில் செய்திகளைக் கேட்டோம். இதுபோன்ற நிலைமை அங்கு மட்டுமல்ல, விருதுநகரிலே இருக்கிறது, கோவையிலே இருக்கிறது, பூண்டியிலே இருக்கிறது, பூண்டிக் கல்லூரி சாத்தப் பட்டிருக்கிறது. மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். பொதுவாக, தமிழகம் முழுவதும் கல்லூரிகளில் கடுமையான நிலைமைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது தொடர்ச்சி யாகப் பரவிக் கொண்டிருக்கிறது. அப்படித் தொடர்ச்சியாகப் போகின்ற நிலையைப் போக்குவதற்கும் மென்மையான மலர்களைப் போன்ற மாணவர்கள் மீது கண்ணீர்புகையும், தடியடிப் பிரயோகமும் செய்துவிட்டு இலேசாகச் செய்தோம் என்று சொல்லப்படுகிற வாதத்தை விவாதிக்கவும் இந்த அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, தொடர்ந்தாற்போல் மாநிலம் முழுவதும் பல கல்லூரிகள் மூடப்படும் அளவிற்கு இன்றைக்குச் சூழ்நிலைகள் மாறி வருகின்றன. இது எல்லோருக்கும் கவலையளிக்கின்ற பிரச்னை. குறிப்பாக சதக்கத்துல்லா கல்லூரி மைனாரிட்டி சமூகத்தினரால் எல்லா இடங்களிலும் வசூல் செய்து கட்டடம் எல்லாம் அமைத்து

அண்மையிலிருந்துதான் நடத்தப்பட்டு வருகிறது, அந்தக் கட்டடம் இன்றைக்குத் தாக்கப்பட்டு 75 ஆயிரம் ரூபாய் அளவிற்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, அந்தக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் கிளர்ச்சி செய்யவில்லை. வேறு ஒன்றிரண்டு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் ஊர்வலமாக அந்தக் கல்லூரிக்கு வந்து அந்தக் கல்லூரி மாணவர்களையும் வற்புறுத்தி நீங்களும் கிளர்ச்சியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பிறகு அங்கே அமளி துமளி ஏற்பட்டு, அந்தக் கல்லூரியின் முதல்வரைத் தாக்குவதற்கும் முயற்சித்திருக்கிறார்கள். கல்லூரி முதல்வர் ஓடி ஒளியாமல் இருந்திருந்தால் அவரும் தாக்கப்பட்டிருப்பார் என்று பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. ஏதோ மாணவர்களுக்கு அப்பாற்பட்டவர்கள் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது. இதைப்பற்றியெல்லாம் விரிவாக விவாதிக்க வேண்டுமென்று இன்றைக்குச் சதகத்துல்லா கல்லூரியில் நடைபெற்றமாதிரி மற்றக் கல்லூரிகளிலும் நடக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது என்ற நிலைமையில்தான் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அத்தனை கல்லூரிகளையும் மூட வேண்டுமென்று கலெக்டர் கேட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான மாணவர்கள் படிப்பைத் தொடர முடியாமல் இருக்கின்ற நிலையில் இந்தச் சபையை ஒத்தி வைத்து விவாதித்தால் முறையாக இருக்கும் என்ற காரணத்தால் இந்தத் தீர்மானத்தை நான் வற்புறுத்தி முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, பாளையங்கோட்டையில் சதகத்துல்லா அப்பா கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியை ஒட்டி இன்றையதினம் திருநெல்வேலியில் அனைத்துக் கல்லூரிகளும் மூடப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக மாணவர்கள் கிளர்ச்சி பள்ளி ஆண்டு இறுதியில்தான் தொடங்கும். ஆனால் இந்தத் தடவை ஆரம்பத்திலேயே ஆரம்பித்திருக்கிறது என்பதை அரசு கவனிக்க வேண்டுமென்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன் காரணம், அரசு மாணவர் பிரச்னையைத் தீர்ப்பதில் கவலையற்றிருக்கிறது என்று நான் கூறவில்லை. இருந்தாலும் அதன் காரணத்தை எண்ணிப் பார்க்காமல் இதற்கு யாரோ காரணம், இதற்குப் பின்னால் அரசியல் கட்சிகள் இருக்கின்றன என்பதாக எண்ணிச் செயற்படுகிற காரணத்தால் இந்த மாணவர்

கிளர்ச்சிக்கு உண்மையிலேயே இருக்கிற காரணத்தை அறிந்து அந்தக் கிளர்ச்சியைத் தவிர்த்து மாணவர்களிடையில் சமாதான நிலையை உருவாக்குவதற்குப் பதிலாக காரியங்கள் திசை திரும்பிப் போகின்றன என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உண்மையிலேயே மாணவர்களிடையே இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறுவது வருந்தத் தக்கது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பற்றிப் பேசுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இது ஆளுங்கட்சி மட்டுமல்லாமல் அனைத்துக் கட்சிகளும் விரும்பக் கூடியதல்ல என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்றையதினம் முதலமைச்சரவர்கள் சென்னையில் இருக்கின்ற கல்லூரி மாணவர்களைச் சந்திப்பதைப் போல பாளையங்கோட்டையில் மட்டுமல்ல, மாநிலத்தில் இருக்கின்ற அனைத்துக் கல்லூரி மாணவர் பிரதிநிதிகளையும், கல்லூரி நிர்வாகத்திலுள்ள பிரதிநிதிகளையும் அழைத்து இதற்கு உண்மையான காரணம் என்ன என்பதை அரசு அறிந்து அதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதை அறிந்து கொள்வதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதித்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

* திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் தலைவரவர்களே, திருநெல்வேலியில் பாளையங்கோட்டை கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமல்ல, அநேகமாக மாணவர்கள் அனைவருக்கும் கடந்த இரண்டாண்டுக் காலமாக பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. கல்வி சிஸ்டம் சம்பந்தமாக, ஹாஸ்டல் ஃபீஸ் சம்பந்தமாக, புத்தகங்களின் விலைகள் உயர்ந்து விட்டது சம்பந்தமாக காலேஜ் யூனியன்கள் தேர்தல் நடத்தாதது சம்பந்தமாக இப்படிப் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. அவை பூராவும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. அதனால் குமுறி வெடித்துக் கொண்டு வரும் சூழ்நிலை மாணவர்கள் மத்தியில் இருக்கிறது. அதன் ஒரு பகுதியாகத்தான் சதகத்துல்லா அப்பா கல்லூரியில் ஏற்பட்டுள்ள நிலைமைகள். குமுறி வெடிப்பதற்கு முன்னால் இப்படிப்பட்ட குறிப்பிட்ட காரியங்கள் சம்பந்தமாக,

காலேஜ் நிர்வாகிகளின் பிரதிநிதிகளையும், மாணவர் பிரதிநிதிகளையும் அழைத்து மாவட்டக் கலெக்டர் பேச ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாவட்டக் கலெக்டர்களுக்கு முதலமைச்சரும், கல்வியமைச்சரும் தாக்கீது கொடுப்பதன் மூலமாக இப்படிப்பட்ட பிரச்னைகளைத் தீர்க்க முடியும். அதற்குப் பதிலாக வாலிபர்கள் ஆவேச உணர்ச்சிக்கு ஆட்படுபவர்கள், அவர்கள் தங்கள் காரியங்களுக்காகக் கிளர்ந்தெழும்பொழுது போலீஸ் தடிகொண்டு தாக்குவதால் அது மேலும் பல்வேறு இடங்களுக்குப் பரவு வதற்குத்தான் உதவும். ஏன்? மாநிலம் பூராவும் பரவும். அன்றைக்குக் கோட்டைக்குள்ளேயே ஆவேசத் துடிப்புடன் நுழைந்த மாணவர்களை நம்முடைய முதலமைச்சரவர்கள் சாதுர்யமாக எப்படிச் சந்தித்துப் பேசி விசாரித்து அனுப்பினர்கள் என்ற நிலைமைகளை நாம் பார்த்தோம்.

அந்த மாதிரியே போலீஸ் அதிகாரிகள் இப்படிப்பட்ட பிரச்னைகளை எப்படிச் சமாளிப்பது என்ற முறையிலே அவர்களுக்கு அறிவுரை நல்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் விவாதித்து, மாணவர் சமுதாயத்தைச் சமாதானப் படுத்துவதற்காகவும், இருக்கின்ற குமுறலைத் தடுக்க ஏற்பாடுகள் செய்வதற்காகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்னையை, நாடு முழுவதும் பரவிக் கொண்டிருக்கின்ற இந்தப் பிரச்னையை அரசியல் கட்சி பிரச்னையாகப் பார்க்காமல் இதை விவாதிப்பதற்காக அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, 2—8—1977, செவ்வாய்க்கிழமை காலையில், பாளையங்கோட்டை புனித ஜான் உயர்நிலைப்பள்ளி, புனித ஜான் கல்லூரி, எம்.டி.டி. இந்து கல்லூரி மற்றும் சதகத்துல்லா அப்பா கல்லூரியைச் சார்ந்த சில மாணவர்கள் உட்பட, சுமார் 1,200 மாணவர்கள் சதகத்துல்லா அப்பா கல்லூரிக்குள் நுழைந்து, பி.ஏ. இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவரொருவருக்கு மாற்றல் சான்றிதழ் வழங்கியதைத் திரும்பப் பெறுமாறும், கல்லூரி மன்றத்திற்குத் தேர்தல் நடத்தும்படியும், இன்னும் சில கோரிக்கைகளையும் எழுப்பினர். அக்கோரிக்கைகள் ஒத்துக் கொள்ளப்படாத காரணத்தினல் மாணவர்கள் கலவரத்தில் ஈடுபட்டு கற்களை வீசி கல்லூரிக் கட்டிடங்களுக்கு மிகுந்த சேதத்தை உண்டாக்கினர்.

பாளையங்கோட்டை சதக்கதுல்லா அப்பா கல்லூரி மாணவர்கள் மீது காவல் துறையினர் தடியடிப் பிரயோகம் செய்ததும், அதையொட்டி அங்கு ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்தும்

1977 ஆகஸ்டு 4] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

(முற்பகல் 9-30)

செய்தியறிந்தவுடன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவருடன் குற்றாலத்திலிருந்து பாளையங் கோட்டைக்கு விரைந்து சென்று சுமார் 11 மணியளவில் கல்லூரியை அடைந்தார். ஏற்கனவே அங்கிருந்த மாவட்டக் காவல் கண்காணிப்பாளருடன் சேர்ந்து, மாணவர்களை அமைதிப்படுத்த முயற்சித்தபோதிலும் மாணவர்கள் அதிகாரிகள், முன்னிலை யிலேயே வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர். மாவட்ட ஆட்சித் தலைவர் சுமார் 1½ மணி நேரம் மாணவர்களைக் கலைந்து செல்லும் படியும் அவர்களது பிரதிநிதிகளைத் தன்னுடன் பேசும்படி அனுமதிக்கக் கோரியும், மாணவர்கள், இடைவிடாது கல்லூரி சோதனைக்கூடம், முதல்வர் அறை மற்றும் கல்லூரிக் கட்டிடங்கள் மீது கற்களை வீசி வன்முறையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். கல்லூரி முதல்வரின் உயிருக்கே ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர், கூட்டம் சட்ட விரோதமானது என அறிவித்து கூட்டத்தினரை ஐந்து நிமிடங் களில் கலைந்து செல்லும்படி எச்சரித்தார். கூட்டம் இவ்வெச்சரிக் கைக்கு உடன்படவில்லை. ஆகவே, அவர், கூட்டத்தைக் கலைத்து அப்புறப்படுத்துமாறு காவல் துறையினருக்கு உத்தரவிட்டார். காவலர்கள் கூட்டத்தினரைத் துரத்தியவுடன் மாணவர்கள் கலைந்து ஓடிவிட்டனர்.

கல்லூரிக்குச் சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் சேதம் ஏற்பட் டிருக்குமென்று கல்லூரி முதல்வர் கணித்திருக்கின்றார். அவர் கொடுத்த புகாரின் மீது காவல்துறையினர் இ.பி.கோ. 147, 447, 427, 336 ஆகிய செக்ஷன்களின்படி புலனாய்விற்கு எடுத்துக் கொண்டுள்ளனர். பொதுஜன அமைதிக்குப் பங்கம் ஏற்படாமலும் இதுபோன்ற அசம்பாவிதங்கள் மீண்டும் நேராமல் இருப்பதற் காகவும் 144 செக்ஷன்படி தடையுத்தரவு திருநெல்வேலி, பாளையங் கோட்டை, மேலப்பாளையம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3—8—1977 ஆம் தேதியன்று பகல் 2-30 மணிக்கு திருநெல்வேலி, பாளையங்கோட்டை கல்லூரி முதல்வர்கள் கூட்ட மொன்றினை மாவட்ட ஆட்சித் தலைவரும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளரும் கூட்டினர். அக்கூட்டத்தில் சதகத்துல்லா

பாளையங்கோட்டை சதக்கதுல்லா அப்பா கல்லூரி மாணவர்கள் மீது காவல் துறையினர் தடியடிப் பிரயோகம் செய்ததும், அதையொட்டி அங்கு ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்தும்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1977 ஆகஸ்டு 4

அப்பா கல்லூரியில் 2—8—1977 ஆம் தேதியன்று நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள சட்டம், ஒழுங்கு நிலைமைகளைப் பரிசிலனை செய்து, பொது அமைதியைக் கருதி திருநெல்வேலியிலுள்ள ஆண்கள் கல்லூரிகள் மற்றும் மாணவர் விடுதிகள் அனைத்தையும் 15—8—1977 ஆம் தேதிவரை மூடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர் நிலைமையினைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார். நிலைமை அமைதியாக உள்ளது. எனவே, பேரவையின் ஏனைய நடவடிக்கைகளை ஒத்தி வைத்து, மேற்குறித்த பொருள்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை இம் மாமன்றத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் ஒரு யோசனையைக் கூறினார்கள். சென்னையிலே, மாணவர்களை அழைத்து நான் பேசி, அவர்களுடைய எண்ணங்களைத் தெரிந்து சுமுகமான முடிவிற்கு ஏற்பாடு செய்கின்ற நிலைமையில், மற்ற மாவட்டங்களிலுள்ள மாணவர்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து, இதற்கு ஒரு நல்ல நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்றும் அவரும் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் இங்கே கருத்துத் தெரிவித்தார்கள். இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரையில், நாங்கள் எந்த அளவுக்குச் சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கருதுகிறோமோ. அந்த அளவுக்குச் செயல் படுகிறோம் என்பதையும் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாதவாறு தடுக்க நேற்றையதினம் அறிவித்தபடி மாணவர்களுடைய பெற்றோர்களையும் மாணவர் பிரதிநிதிகளையும் அரசாங்கத்திலேயுள்ள அதிகாரப் பிரதிநிதிகளையும் கொண்ட குழுக்களை ஆங்காங்கே அமைத்து அவர்கள் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கையை எடுப்பதற்கு இந்த அமைச்சரவை காத்திருக்கிறது என்று சொல்லி, ஆகவே, ஒத்தி வைப்புத் தீர்மானம் வற்புறுத்தப்பட வேண்டாம், ஒத்தி வைக்க வேண்டா மென்று நான் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.